13.07.2016

தினமணி

### இன்றைய வேளாண் செய்திகள்

## உத்தமபாளையம் பகுதியில் அவரை விளைச்சல் அமோகம்

உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம், அனுமந்தன்பட்டி என கம்பம் பள்ளத்தாக்கு வழியாக செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் அவரை பயிரிடப்பட்டது. இது தவிர நிலக்கடலை, தட்டப்பயிர் விவசாயமும் நடைபெறுள்ளது.

சாரல் மழையால் அமோக விளைச்சல்: தென்மேற்கு பருவமழை, கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் தீவிரமாக இல்லாத நிலையில் அவ்வப்போது பெய்யும் சாரல் மழையால் அவரைக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் கிலோ ரூ.50-க்கு விற்பனையான அவரைக்காய் தற்போது கிலோ ரூ.20 ஆக குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் கூறுகையில், இந்தாண்டு விளைச்சல் அதிகரிப்பால் விலை குறைவு என்றாலும் பாதிப்பில்லை என்றனர்.

## ராமநாதபுரத்தில் ஜூலை 15 இல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

ராமநாதபுரத்தில் ஜூலை 15ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் கூறப்பட்டுள்ளது: ஆட்சியர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் தலைமையில் நடைபெறவுள்ள விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகளும்,விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த பொருள்கள் பற்றி மட்டுமே விவாதிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரூர் ஏரியில் இருந்து முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகேயுள்ள பாரூர் பெரிய ஏரியில் இருந்து முதல் போக சாகுபடிக்கு திங்கள்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. மாநில கால்நடைத் துறை அமைச்சர் பி.பாலகிருஷ்ணாரெட்டி, மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் ஆகியோர் மலர்தூவி தண்ணீரை திறந்துவிட்டனர். பாரூர் பெரிய ஏரியில் இருந்து 2,397.42 ஏக்கர் பாசனத்துக்கு ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் இருந்து முதல் போக சாகுபடிக்கு ஜூலை 11-ஆம் தேதி முதல் டிசம்பர் 7 -ஆம் தேதி வரை 150 நாள்களுக்கு நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொருத்து தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள 7 ஊராட்சிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் உள்ள நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கிழக்கு பிரதான கால்வாய் மூலம் 1,583.75 ஏக்கர் நிலங்களும், மேற்கு பிரதான கால்வாய் மூலம் 813.67 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. இதன் மூலம் பயன் பெறும் ஊராட்சிகள் பாரூர், அரசம்பட்டி, பெண்டரஹள்ளி, கீழ்குப்பம், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்பட்டி, தாதம்பட்டி உள்ளிட்ட பகுதிகளாகும்.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி தொகுதி மக்களவை உறுப்பினர் கே.அசோக்குமார், பர்கூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி.ராஜேந்திரன், ஊத்தங்கரை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கோ.ரவிச்சந்திரன், மண்டல பால்வளத் தலைவர் எஸ்.தென்னரசு, தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுவு வங்கித் தலைவர் கேசவன், போச்சம்பள்ளி வட்டாட்சியர் ஆர்.முருகன், பொதுப்பணித் துறை உதவி, செயற்பொறியாளர் சாம்ராஜ், மாவட்டச் செயலர் வி.கோவிந்தராஜ், பர்கூர் ஒன்றியச் செயலர் ஜெயபால், காவேரிப்பட்டினம் ஒன்றியச் செயலர் எம்.எஸ்.பிரபாகரன். பாரூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.கண்ணப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஜூலை 16-இல் சீர்காழியில் நெல் திருவிழா

சீர்காழியில் நலம் பாரம்பரியம் விவசாய அறக்கட்டளை சார்பில், நெல் திருவிழா மற்றும் கண்காட்சி, கருத்தரங்கம் ஆகியவை ஜூலை 16-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து நலம் பாரம்பரியம் விவசாய அறக்கட்டளை செயலர் ரா. சுதாகர் தெரிவித்தது: சீர்காழி விளந்திடசமுத்திரம் கடைக்கண் விநாயகநல்லூர் எஸ்டேட் திருமண அரங்கில் வரும் 16 ஆம் தேதி நெல் திருவிழா நடைபெறுகிறது. இதில் சுமார் 400 விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகளான மாப்பிள்ளைசம்பா, கிச்சடி சம்பா, சீரகச் சம்பா, பூங்காரு, குள்ளக்காரு, கருங்குறுவை உள்ளிட்ட 150 வகையான நெல் விதைகள் ஒவ்வொன்றிலும் 2 கிலோ வீதம் விவசாயிகளுக்கு (விலையில்லாமல்) வழங்கப்படவுள்ளது.

இதனை விவசாயிகள் வாங்கிச் சென்று ரசாயன உர கலப்பு இல்லாமல் முற்றிலும் இயற்கை முறையில் சாகுபடி பணிகள் மேற்கொண்டு, அறுவடை செய்த பின்னர் அந்தந்த ரக நெல்களை அடுத்த ஆண்டு நடைபெறும் நெல் திருவிழாவில் 4 கிலோ விதை நெல்லாக திருப்பி வழங்க வேண்டும். 150 ரகங்கள் கொண்ட பாரம்பரிய நெல் மற்றும் அரிசி வகைகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

விவசாயம் தொடர்பாக கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் இயற்கை முறையில் விளைவிக்கப்படும் நெல்லினால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், பாரம்பரிய நெல் சாகுபடி செய்யும் முறைகள் பற்றியும், உணவுப் பழக்க வழக்கங்களால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் குறித்து விவசாயிகளின் பல்வேறு சந்தேகங்களுக்கு மூத்த விவசாயிகள், சான்றோர்கள், அறிஞர்கள் பங்கேற்று கலந்துரையாடவுள்ளனர். இலவச சித்த வைத்திய முகாமும் நடைபெறுகிறது என்றார் சுதாகர்.

## திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிந்த பருத்தி

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு, செவ்வாய்க்கிழமை 1,051 லாட் பருத்தி பஞ்சுகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது பருத்தி செடியிலிருந்து பஞ்சுகள் எடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் அறுவடை செய்த பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மறைமுக ஏலத்துக்கு கொண்டு வருவது வழக்கம்.

அதன்படி, செவ்வாய்க்கிழமை திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நெருங்குடி, அடியக்கமங்கலம், தென் ஓடச்சேரி, சத்தியவாடி, முல்லித்தோப்பு, ஆதிச்சபுரம், கோட்டூர், ராதாமங்கலம், ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி, கல்லிக்குடி, பழையவலம், மழையூர், சித்தாநல்லூர், எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் 1,051 லாட்டுகளில் பஞ்சுகளை ஏலத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த பஞ்சுகளை செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்திருந்த 10 வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச்சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர். இதையடுத்து, பிற்பகல் வேளாண் விற்பனைக் குழு செயலாளர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப்பெட்டியைத் திறந்து வியாபாரிகள் கேட்ட விலையைப் படித்தனர். இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 6,069 விலை கேட்கப்பட்டிருந்தது. குறைந்தபட்சமாக ரூ.5,839 விலையும், சராசரியாக ரூ.5,289 விலை போனது.

## திருவாரூரில் கொத்து ரோஜா செடிகள் விற்பனை ஜோர்

நாகர்கோவில் கொத்து ரோஜா செடிகள் விற்பனை திருவாரூரில் ஜோராக நடைபெறுகிறது.

திருவாரூர் கமலாலயம் குளத்தின் கீழ்கரையில் தற்காலிகமாக ரோஜா செடிகள் உள்ளிட்ட பூ வகைகள், பழச்செடிகளை சாலையோரம் அடுக்கிவைத்து, சிலர் விற்பனை செய்து வருகின்றனர்.

இதில் கொத்து கொத்தாக பூக்கும் ரோஜா மலர் செடிகளும் உள்ளன. மேலும் வெள்ளை ரோஜா, மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு வண்ணங்களில் பூக்கும் விதவிதமான

ரோஜா செடிகளும், அடுக்குமல்லி, குண்டுமல்லி உள்ளிட்ட பூச்செடிகளும், துளசி போன்ற மூலிகைச் செடிகளும், மா, பலா, கொய்யா போன்ற பழவகைச் செடிகளும், தேக்கு, அரளி போன்ற செடிகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

இகுறித்து செடிகளை விற்பனை செய்யும் தங்கம் கூறியதாவது:

நாங்கள் நாகர்கோவில் பகுதியில் நர்சரி அமைத்துள்ளோம். அங்கிருந்து அழகுச் செடிகள், பூச்செடிகள், பழ வகை செடிகளை ஆண்டுதோறும் இப்பகுதிக்கு கொண்டுவந்து விற்பனை செய்வோம்.

திருவாரூரில் பத்து நாள்களுக்குத் தங்கி விற்பனை செய்ய 5,000 கன்றுகளை கொண்டு வந்துள்ளோம். ரூ. 30 முதல் ரூ. 80 வரை செடிகளின் ரகத்துக்கு ஏற்றார்போல் விற்பனை செய்கிறோம். இதனை இப்பகுதி மக்கள் ஆர்வத்தோடு வாங்கிச் செல்கின்றனர்.

அவர்களுக்கு செடிகளை எப்படி நட்டு, பராமரிக்க வேண்டும் என கூறுவதோடு, உரங்களையும் விற்பனை செய்கிறோம். நிகழாண்டு புதிய வரவாக கொண்டுவந்துள்ள கொத்து ரோஜா செடிகள் அதிகமாக விற்பனையாகிறது என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பாலை நிலத்தை பசுமையாக்கிய வங்கி ஊழியர்**

திண்டுக்கல் மாவட்டம் விருவீடு அருகே ராஜதானிக் கோட்டையைச் சேர்ந்தவர் பாண்டியராஜன், 55. விவசாயத்தின் மீதான காதலால் வங்கிப்பணிக்கு 2000ல் விருப்ப ஓய்வு கொடுத்தார்.

2012ல் ஊருக்கு அருகில் 12 ஏக்கர் நிலத்தை வாங்கி இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறார். வறண்ட நிலத்தில் என்ன செய்ய முடியும்? என பலர் ஏளனம் பேசினர். அதை செவிமடுக்காமல் ஆர்வத்தை உழைப்பில் காட்டினார். தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட போது, சந்தையூர் வைகை ஆற்று படுகையில் 10 சென்ட் நிலம் வாங்கி, கிணறு மற்றும் ஆழ்துளையும் அமைத்தார்.

ரோட்டோரம் குழாய் அமைத்து 5 கி.மீ., தொலைவுக்கு தண்ணீர் கொண்டு சென்று விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார். அவரது தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு, பாலை நிலத்தை பசுமையாக்கியது. அதில் இயற்கை விவசாயத்துடன் புதிய புதிய முயற்சிகளை செய்து வருவதால் ஒருங்கிணைந்த பண்ணையாக உருமாறியுள்ளது.

தேவைக்கு அதிகமாக கிடைக்கும் தண்ணீரை தனக்கு மட்டும் பயன்படுக்காமல், விவசாய ஆர்வம் உள்ள இளைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுத்து உதவுகிறார். இந்த உதவியால் 10 விவசாயிகளுக்கும் பிழைப்பு கிடைத்துள்ளது. இயந்திர பயன்பாடு இல்லை: பண்ணை ஊழியர் வள்ளுவன் கூறுகையில், "மற்றவர்களைப் போல் பண்ணைக்குட்டை அமைக்காமல், குட்டையின் கரையில் மூன்றடுக்கில் தென்னை வளர்க்கிறார். செழிப்பான காலத்தில் குட்டையில் தேங்கியுள்ள தண்ணீர் மரங்களுக்கு சரியாக வரும். மற்ற நாட்களில் சொட்டு நீர் பாசனத்தில் தண்ணீர் பாய்ச்சுகிறோம். இவரது பண்ணை குட்டை அருகேயுள்ள விவசாய கிணறுகள், ஆழ் துளைகள் ஊற்றுப் பிடித்து மேலும் சில விவசாயிகள் பயன் அடைகின்றனர்" என்றார். சாகுபடிக்காக சிறிதளவு உரத்துடன், மீன் அமிலக் கரைசல், பஞ்சகவ்யா, கன ஜீவாமிர்தத்தை கலந்து விவசாயம் செய்கிறார். இப்படி 23 ஆண்டுகளாக விவசாயத்தில் கிடைத்த வருமானத்தை மீண்டும், மீண்டும் நிலத்திலேயே முதலீடு செய்துள்ளார். 15 ஆண்டுகளாக எலுமிச்சையில் ரூ.பல லட்சம் வருமானம் பார்த்தார். அதைக் கொண்டு தென்னை நடவு செய்தார். தற்போது இவரது பண்ணையில் 1800 தென்னை, 1000 முருங்கை மரங்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. அதில் ஊடுபயிராக கத்தரி, நார்த்தங்காய், வாழை பயிரிட்டுள்ளார். பண்ணையில் வளரும் 10 வெள்ளாடுகள் இயற்கை உரத்தை தருகின்றன. அடுத்து நாட்டு மாடுகள் வளர்ப்புக்கு புல் தேவை என்பதால் அதையும் வளர்க்கிறார்.

தொடர்புக்கு 97874 -38809 - **ஸ்தானிகபிரபு, வத்தலக்குண்டு** ஒருவர் மட்டுமே இயற்கை விவசாயம் செய்து வெற்றி காண முடியாது. ஒன்றிய பகுதிகளில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து இயற்கை விவசாய முறையின் நன்மைகளை விளக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். எனது கிராமத்தை பசுமையாக மாற்றுவதே எனது குறிக்கோள்.- **பாண்டியராஜன்**

## சூரிய ஒளி மின்சக்தியால் மூன்று போக விவசாயம்

தமிழக விவசாயிகள் அரசு வழங்கும் விவசாய மின் இணைப்பு பெற விண்ணபித்து ஆண்டு கணக்கில் காத்திருக்கின்றனர். விவசாயிகளின் கனவை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை சார்பில் சூரிய ஒளி மின் சக்திக்கு 80 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. இதன்படி சொந்த நிலத்தில் விவசாயம் செய்வோருக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில் ரூ.3 லட்சம் 84 ஆயிரம் மானியம் கிடைக்கிறது. பயனாளிகள் ரூ.1.17 லட்சம் செலவிட்டால் போதும் 25 ஆண்டுக்கு தண்ணீருக்கு பஞ்சம் ஏற்படாது. விவசாயிகள் பலர் சூரிய ஒளி மின்சாரத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனினும் மதுரை மாவட்டம் குலமங்கலத்தை சேர்ந்த முன்னோடி விவசாயி வி.கிருஷ்ணன் சூரிய ஒளி மின்சாரத்தை பயன்படுத்தி ஆண்டுக்கு நெல், சிறுதானியம் என மூன்று போக சாகுபடி செய்து அசத்துகிறார்.

அவர் கூறியதாவது: குலமங்கலம் அருகே தண்டலையில் சொந்த நிலம் மற்றும் குத்தகை நிலம் உள்ளன. மூன்று ஏக்கரில் நெல், ஒரு ஏக்கரில் பாசிப் பயறு, 50 சென்டில் கேழ்வரகு பயிரிட்டுள்ளேன். உதாரணத்துக்கு கேழ்வரகு அறுவடை முடிந்ததும், குதிரைவாலி சாகுபடி செய்வேன். பாசிப்பயறு அறுவடை முடிந்து, உளுந்து சாகுபடி செய்வேன். இப்படி நிலத்தில் வெவ்வேறு தானிய வகைகளை பயிரிடும்போது விளைச்சல் நன்றாக உள்ளது.

தவிர சீசனுக்கு ஏற்ப அனைத்து காய்கறிகளும் விளைவிக்கிறேன். 27 அடி ஆழம் கொண்ட கிணற்றில் எப்போதும் தண்ணீர் இருக்கும். சூரிய ஒளி மின்சாரத்தை பயன்படுத்தி ஆண்டுக்கு மூன்று போக விவசாயம் செய்கிறேன். காலையில் வெயில் அடிக்க துவங்கியது முதல் மாலையில் வெயில் மங்கும் வரை சூரிய ஒளி மின்சாரம் மூலம் கிணற்றில் இருக்கும் மோட்டார் பம்பு இயங்கி கிணற்று நீரை வயல்களுக்கு பாய்ச்சும்.

செலவு மிச்சம்: வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச, வரப்பை சரி செய்ய ஆட்கள் தேவையில்லை. அதை நானே பார்த்து கொள்கிறேன். நெல் சாகுபடியை பொறுத்தமட்டில் இயந்திர நடவு, அறுவடை செய்வதால் ஏக்கருக்கு கூலியாக ஒரு மூடை நெல் கொடுக்கும் செலவு மிச்சம். மின்சார கட்டண செலவு, சூரிய ஒளி மின்சார பேனல் பராமரிப்பு செலவு, பேட்டரி செலவு என எதுவும் இல்லை. 2012ல் நெல் நடவு முதல் அறுவடை வரை அனைத்தும் இயந்திரம் மூலம்

செய்ததால் மத்திய வேளாண் துறை சார்பில் தேசிய அளவிலான முன்னோடி விவசாயி விருது கிடைத்தது.

கொஞ்சம் முதலீடு அதிக வருவாய் என கொள்கை அடிப்படையில் விவசாயம் செய்வதால் விவசாயத்தில் லாபம் இரட்டிப்பாக உள்ளது என்றார். விவசாயத்தில் தொடர்ந்து சாதனை புரிந்து வருவதால் 2011 முதல் 2016 ஜூன் வரை தேசிய, மாநில, மாவட்ட அளவில் பல விருதுகளை பெற்று வருகிறார். தொடர்புக்கு 89737 37379.- **கா.சுப்பிரமணியன், மதுரை.**

## உணவகங்கள் விடுதிகளில் வெங்காய சேமிப்பு கலன்

உலகிலேயே வெங்காய உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கின்றது. உணவில் முக்கிய இடம் வகிக்கிறது. மருத்துவ குணம் கொண்டது. நம் நாட்டில் ஆண்டுக்கு 4.30 மில்லியன் டன் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயத்தை விதைக்காக மட்டுமே விவசாயிகள் சேமிக்கின்றனர். வெங்காய சேமிப்பு கலன் என்பது வெளிப்புற சேமிப்பு கலன், உட்புற சேமிப்பு கலன் என இரண்டு வகை உண்டு.

வெளிப்புற சேமிப்பு கலன்: பள்ளி, கல்லூரி, உணவகங்கள், விடுதி வளாகங்களில் 1,000 முதல் 5,000 கிலோ வரை வெங்காயம் தேவை ஏற்படும் இடங்களில் கலன் அமைக்கலாம். அருகில் தண்ணீர், குப்பைகள், கழிப்பறைகள் இருக்கக்கூடாது. தேவைக்கு தகுந்தவாறு 10க்கு 10 அடி என்ற அளவில் அல்லது 20க்கு 20 அடி என்ற அளவில் இடத்தை தேர்வு செய்து நான்கு அடி உயரத்தில் நான்கு தூண்களை சதுர வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ வடிவமைத்து நிறுவ வேண்டும். மேற்கூரையை அலுமினியம், துருப்பிடிக்காத எவர் சில்வரால் உருவாக்க வேண்டும். சுற்றளவு இடத்தை இரும்பு வலை கொண்டு மூடி அடைத்து விட வேண்டும்.

உட்புற சேமிப்பு கலன்: காற்றோட்டம் இருக்க வேண்டும். மழைச்சாரல் விழக்கூடாது. 5 முதல் 60 கிலோ வரை சேமிக்க கூடியதாக இருத்தல் வேண்டும். நகரும் வடிவமைப்பு கொண்டதாக வடிவமைக்க வேண்டும். எலி, கரப்பான் பூச்சிகள் வராத இடமாக தேர்வு செய்ய வேண்டும். 2 அல்லது 3 அடி வரை தூணாக இரும்பு கம்பிகளை வைத்து சதுரமோ அல்லது செவ்வக அமைப்பிலோ அமைக்கலாம். மர ரீப்பர்களை வைத்து அடித்தளம் அமைக்க வேண்டும். மேற்கூரை தேவையில்லாததால் கம்பி வலையை வைத்து மூடி விட வேண்டும்.

பக்குவப்படுத்தும் முறைகள்: முதிர்ந்த வெங்காயத்தை அறுவடை செய்தல். அறுவடை செய்த வெங்காயத்தை 250 முதல் 300 கிலோ வரை தாளுடன் நூல் கொண்டு கட்டி விட வேண்டும். 48 மணி நேரம் மிதமான சூரிய ஒளியில் உலர வைக்க வேண்டும். வெங்காயக்கை ஒட்டிய மண்ணை கட்டி விட வேண்டும். பின் முதலில் கம்பியால் தொங்க விட வேண்டும். தாளுடன் பாதி தாள் ஒரு பக்கமும், பாதி வெங்காயம் ஒரு பக்கமாக இருக்குமாறு தொங்க விடுதல் வேண்டும்.

மர ரீப்பர் கட்டில் வெங்காய கற்றையை காள் மேலிருக்கும் சாய்வாக வைக்தல் வேண்டும். இரண்டு அடி உயரத்திற்கு மட்டுமே வெங்காயக் கற்றையை அடுக்கி வைத்தல் வேண்டும்.

உட்புற வெங்காய சேமிப்பு கலனின் ஒரு அடி உயரம் வைக்கால் போதுமானது. 30 நாட்களுக்கு வெங்காய கற்றையை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை திருப்பி போட வேண்டும். பின் 15 நாட்களுக்கு ஒரு முறை திருப்பி போடுதல் வேண்டும். சேமித்து 30 நாட்களுக்கு பின் தேவையான அளவு வெங்காயக்கை தொங்க விடப்பட்டிருக்கும் பகுதியில் இருந்து எடுக்க தொடங்க வேண்டும் என்றார்.

**- தி.யுவராஜ், வேளாண் பொறியாளர், உடுமலை.**

## நாக்பூர் ஆரஞ்சு கிலோ ரூ.90

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால் நாக்பூர் ஆரஞ்சு விலை குறைந்துள்ளது.

திண்டுக்கல், ஆத்துார், ரெட்டியார்சத்திரம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் ஆரஞ்சு 2 ஆயிரம் எக்டேரில் சாகுபடியாகிறது.

திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு உள்ளூர் மற்றும் மதுரை, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில், நாக்பூரில் இருந்து 20 டன் ஆரஞ்சு பழம் விற்பனைக்கு வரும்.

ஏப்ரல், மே மாதங்களில் நாக்பூரில் ஆரஞ்சு சீசன் பெரியளவில் இல்லை. இதனால் போதுமான வரத்து இன்றி ஒரு கிலோ நாக்பூர் ஆரஞ்சு ரூ.120 முதல் ரூ.140 வரை விற்றது.தற்போது சீசன் துவங்கியுள்ளதால் நாக்பூர் ஆரஞ்சு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஒரு கிலோ ரூ.90 க்கு விற்பனையானது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,' வரத்து அதிகரிப்பால் நாக்பூர் ஆரஞ்ச், சாத்துக்குடி, நாவல் பழம், கொய்யா உள்ளிட்ட பழங்களின் விலையும் குறைந்துள்ளது', என்றார்.

## தழை உரப்பயிரிடும் விவசாயிகளுக்கு வேளாண்துறை மானியம்

செஞ்சி: தழைஉரப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.
வல்லம் வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:
வல்லம் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தின் முன்னோட்டமாக தழை உரப் பயிர்கள் விதைப்பு செய்து வருகின்றனர்.

ஒரு எக்டர் தழை உரம் விதைப்பு செய்ய 50 கிலோ விதைகள் போதுமானது.

விதைத்த 45 நாட்களில் மடக்கி உழுவதால் தழை உரப்பயிர்களில் உள்ள தழைச்சத்து மண்ணுடன் சேர்ந்து சம்பா பயிருக்கு கூடுதல் உரமாகிறது.

தழை உரப் பயிர்களில் தக்கைப் பூண்டு, சணப்பை போன்ற ரகங்கள் முக்கியமானவை. காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து கொண்டு பயிரின் இலைகளில் சேமிக்கப்படுகின்றது. பயிர் பூப்பதற்கு முன்பு மடக்கி நிலத்தினில் உழுவதால் சம்பா பருவத்திற்கு தேவையான தழைச்சத்து உரம் பயிருக்கு எளிதில் கிடைக்கிறது.

மண் வளம் காக்கப்பட்டு, ரசாயன பூச்சி கொல்லிகளால் நிலத்தில் படிந்துள்ள நச்சுத்தன்மை அகற்றப்பட்டு மகசூல் கூடுகிறது.
தழைஉரப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு எக்டர் பயிருக்கு ரூ. 1,500 மானியமாக வேளாண்மை துறையின் மூலமாக வழங்கப்படுகிறது.
இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் கடலை மாவு, எண்ணெய் விலை கிடுகிடு

சேலம்: தமிழகத்தில் கடலை மாவு, எண்ணெய் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில், கொண்டைக்கடலை விலை உயர்ந்துள்ளதால், அதை மூலப்பொருளாக கொண்டு தயார் செய்யப்படும், கடலை மாவு, கடலை பருப்பு, பொட்டுக்கடலை ஆகியவற்றின் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ,

100 ரூபாய்க்கு விற்ற கடலை மாவு, 130 ரூபாயாகவும், 100 ரூபாய்க்கு விற்ற கடலை பருப்பு, 130 ரூபாயாகவும், 110 ரூபாய்க்கு விற்ற பொட்டுக்கடலை, 134 ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும் கடந்த ஒரு மாதமாக, பாமாயில், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், லிட்டருக்கு, ஐந்து ரூபாய் விலை அதிகரித்துள்ளது.

இது குறித்து, சேலம் மாவட்ட ஓட்டல் உரிமையாளர்கள் சங்க செயலாளர் பழனிச்சாமி கூறியதாவது: அத்தியாவசிய பொருட்களின் விலை, தொடர்ந்து உயர்ந்து வருவது, ஓட்டல் தொழிலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஓட்டல் தொழிலில் முக்கிய பங்கு வகிக்கும் கடலை பருப்பு, கடலை மாவு, பொட்டுக்கடலை ஆகியவற்றின் விலை கிலோவுக்கு, 30 ரூபாய் வரையும், எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளது. இந்த உயர்வால், அவற்றை கொண்டு தயார் செய்யப்படும் கார வகைகளின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**சுரைக்காய் விளைச்சல் அதிகரிப்பால் விலை வீழ்ச்சி**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் அடுத்த, மோளக்கவுண்டம்பாளையம், களியனூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், சுரைக்காய் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். தற்போது, சுரைக்காய் சாகுபடி அதிகரித்திருப்பதால், எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது: சுரைக்காய் சாகுபடி செய்த, 40 நாட்களில் இருந்து, அறுவடை செய்யலாம். ஒரு காய், ஐந்து முதல், எட்டு ரூபாய் வரை விற்பனை செய்யலாம். தற்போது, சுரைக்காய் சாகுபடி அதிகரித்து, மார்க்கெட்டுக்கு, அதிகளவு விற்பனைக்கு வருவதால், ஒரு காய், மூன்று ரூபாய்க்கு விற்பனையாகிறது. கணக்கு போட்டால், நஷ்டம் தான் வருகிறது. எப்போதும், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தற்போது இல்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பங்காருபாளையம் அருகே கிளி உருவத்தில் அதிசய மாங்காய்




சித்தூர் : பங்காருபாளையம் அருகே கிளி தோற்றத்தில் காய்த்துள்ள அதிசய மாங்காயை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். சித்தூர் மாவட்டத்தில் பிரபலமான காலாபாட், பங்கனபல்லி போன்ற மாம்பழ வகைகள் அதிகளவில் பயிர் செய்யப்படுகின்றன. இந்நிலையில், சித்தூர் மாவட்டம், பங்காருபாளையம் மண்டலம், மிட்டப்பல்லி கிராமத்தை சேர்ந்த விவசாயி ராஜேந்திர நாயுடுவுக்கு சொந்தமான மாங்காய் தோட்டத்தில் கிளி உருவத்தில் 2 மாங்காய் காய்த்துள்ளது. இந்த அதிசய மாங்காயை அப்பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். மேலும், இதுகுறித்து ராஜேந்திர நாயுடு கூறுகையில், `எனக்கு சொந்தமான இந்த நிலத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மாங்காய் பயிர் செய்து வருகிறேன். இந்நிலையில், தற்போது காய்த்துள்ள

இந்த கிளி உருவ மாங்காயை எனது வீட்டு ஷோகேசில் பத்திரமாக வைக்க போகிறேன்'' என்றார்.

**கர்நாடகாவில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**




மேட்டூர்: கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47 கன அடியை தொட்டுள்ளது. டெல்டா பாசனத்திற்காக ஆண்டுதோறும் ஜுன் 12-ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் இந்த ஆண்டும் குறிப்பிட்ட தேதியில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததை அடுத்து அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்து வருகிறது. கடந்த 3-ம் தேதி 42.50 அடியாக இருந்த நீர்மட்டம் இன்று காலை 46.92 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 6,352 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 ஆயிரம் கனஅடி வீதம் நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 15.92 டிம்.சியாக உள்ளது.

## போச்சம்பள்ளியில் பேரிக்காய் விற்பனை ஜோர்

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் பேரிக்காய் விற்பனை களைகட்டி உள்ளது. கிலோ ரூ.40க்கு விற்பனையாகிறது.

தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பேரிக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கொடைக்கானலில் விளையும் பேரிக்காய், வால்பேரிக்காய் சுவை மிகுந்துள்ளது. இந்த பேரிக்காய்களுக்கு தென்மாவட்டங்கள் மட்டுமின்றி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் வரவேற்பு உள்ளது. தற்போது பேரிக்காய் சீசன் துவங்கி உள்ளது. போச்சம்பள்ளி மற்றும் சுற்றுவட்டாரத்தில் கடந்த சில தினங்களாக பேரிக்காய் வரத்து அதிகரித்துள்ளது. மார்க்கெட் மற்றும் சாலையோர தள்ளுவண்டி கடைகள், கூடை சுமையாக கொண்டு வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். பேரிக்காயில் வைட்டமின் ஏ சத்து நிறைந்திருப்பதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். தற்போது கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## மாங்கனி கண்காட்சியில் இன்றைய நிகழ்ச்சிகள்

கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், கடந்த 25ம் தேதி முதல் 24வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடந்து வருகிறது. கண்காட்சியின் 19வது நாளான இன்று(13ம் தேதி) மாலை 5 மணி முதல் 6 மணி வரை பள்ளி கல்வித்துறை சார்பில், எலத்தகிரி புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சி, மாங்கனி விழா குழுவினர் சார்பில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை கிருஷ்ணகிரி ஜெயவீரபாண்டியனின் ஸ்வர ராக பரதாலயாவின் குச்சிப்புடி நடனம், மாலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை கிருஷ்ணகிரி கலக்கல் பாய்ஸ் குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 8 மணி முதல் 10 மணி வரை சத்யா சினி ஆர்கெஸ்ட்ராவின் இன்னிசை கச்சேரி நடைபெறுகிறது.

## அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.1.60 கோடிக்கு பருத்தி ஏல விற்பனை

அந்தியூர், : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடந்த ஏலத்தில் ரூ.1.60 கோடிக்கு பருத்தி ஏலம் போனது. அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் விளைபொருட்கள் ஏல விற்பனை நடந்தது. 27 ஆயிரம்தேங்காய் வந்ததில் சிறிய தேங்காய் ஒன்று ரூ.2.20க்கும், பெரிய தேங்காய் ரூ.7.50க்கும் மொத்தம் ரூ.1.35 லட்சத்துக்கு விலை போனது.

150 மூட்டை கொப்பரைத் தேங்காய் கிலோ ரூ.46.29 முதல் ரூ.50.15 வரை விலையில் மொத்தம் ரூ.3 லட்சத்துக்கு ஏலம் போனது. சிவப்பு எள் 28 மூட்டைகள் வந்ததில் கிலோ ரூ.45.29 முதல் ரூ.66.29 வரை விலையில் மொத்தம் ரூ.1.50 லட்சத்துக்கு விற்பனை ஆனது. 130 மூட்டைகள் மக்காச்சோளம் கிலோ ரூ.17.19 முதல் ரூ.17.59 வரை விலையில் மொத்தம் ரூ.2.75 லட்சத்துக்கு விற்பனையானது. 10 ஆயிரம் மூட்டைகள் பிடி காட்டன் ரகம் பருத்தி விற்பனைக்கு வந்தது. குவின்டால் ரூ.5 ஆயிரத்து 451 முதல் 6 ஆயிரத்து 10 வரை ரூ.1.60 கோடிக்கு ஏலம் போனது.மொத்த வேளாண் விலை பொருட்கள் ரூ.1 கோடியே 68 லட்சத்து 60 ஆயிரத்திற்கு விற்பனையானது.

## நாட்டுக்கோழி வளர்க்க இன்று பயிற்சி

திருப்பூர், : நாட்டுக் கோழி வளர்ப்புக் குறித்த இலவச பயிற்சி திருப்பூரில் இன்று அளிக்கப்பட உள்ளது. இதுதொடர்பாக கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பூரில் 13ம் தேதி (இன்று) நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

திருப்பூர் பழைய பஸ்நிலையம் எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடக்க உள்ள இப்பயிற்சியில் திருப்பூர் மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம். நாட்டுக் கோழி

வளர்ப்பில் உள்ள விஞ்ஞான முறைகள், வர்த்தக வாய்ப்புகள் குறித்து இப்பயிற்சியில் தெரிவிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு 0421-2248524 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு மானியம்**

புதுக்கோட்டை, : பட்டுவளர்ச்சித்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியத்தை புதுகை கலெக்டர் கணேஷ் வழங்கினார்.

புதுக்கோட்டை ஆலங்குடி தாலுகா திருவரங்குளம் ஒன்றிய பட்டுவளர்ப்பு தொழில் செய்து வரும் விவசாயிகள் 8 பேருக்கு மாநில சமச்சீர் வளர்ச்சி திட்ட நிதியில் இருந்து மானியம் வழங்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலெக்டர் கணேஷ் 8 விவசாயிகளுக்கு தலா ரூ.87 ஆயிரத்து 500 வீதம் பட்டுப்புழு வளர்ப்பு மனை மானியமாக மொத்தம் ரூ.7 லட்சத்தை வழங்கி பேசினார். இதில் திருச்சி மண்டல பட்டு வளர்ச்சித்துறை துணை இயக்குனர் மல்லிகா, உதவி இயக்குனர் சந்திரசேகரன், களப்பணியாளர்கள் குழந்தைவேலு, சத்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

உதவி இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில்,தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறையின் மூலமாக மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தில் இருந்து புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா திருவரங்குளம் ஒன்றியத்திற்கும், கறம்பக்குடி தாலுகா கறம்பக்குடி ஒன்றியத்திற்கும் பட்டு வளர்ப்பு தொழில் செய்து வரும் விவசாயிகளுக்கு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2015-16ம் ஆண்டிற்கு மேற்கண்ட ஒன்றிய பட்டு வளர்ப்பு செய்யும் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு நடவு மானியமாக ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக நடவு மான்யம் ரூ.52 ஆயிரத்து 500, சொட்டு நீர் பாசனத்திற்கு அதிக பட்சமாக ரூ.1 லட்சத்து 50 ஆயிரமும், பட்டுப்புழு வளர்ப்பு மனை நிலை-2 அமைக்க ரூ.87 ஆயிரத்து 500, நவீன புழு வளர்ப்பு தளவாடங்கள் பெறுவதற்கு ரூ.52 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## குமரி மாவட்டத்தில் சூறைக்காற்றுடன் சாரல் மழை பேச்சிப்பாறை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு



குமரி மாவட்டத்தில் சூறைக்காற்றுடன் சாரல் மழை பெய்தது. இந்த மழையினால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

சூறைக்காற்று

குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக சாரல் மழை பெய்து வருகிறது. இந்த மழை நேற்று முன்தினமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தது. நாகர்கோவிலில் நேற்று காலையில் இருந்தே வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. ஆனால் மழை பெய்யவில்லை. அதே சமயம் குலசேகரம், மார்த்தாண்டத்தில் நேற்று சாரல் மழை பெய்தது.

மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையுடன் பலத்த சூறைக்காற்றும் வீசி வருகிறது. பல்வேறு பகுதிகளில் வீசிய சூறைக்காற்றினால் மரங்கள் முறிந்து விழுந்தன. பல இடங்களில் வைக்கப்பட்டிருந்த பேனர்கள் கீழே சாய்ந்தன. நாகர்கோவில் வடசேரி பஸ் நிலைய பகுதியில் நேற்று அதிகாலை உயர்அழுத்த

மின்கம்பி ஒன்று அறுந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. நாகர்கோவில் மணிமேடை ரவுண்டானா பகுதியில் வைக்கப்பட்டிருந்த பேரிகார்டுகள் காற்றில் தூக்கி வீசப்பட்டு ரோட்டில் விழுந்து கிடந்தன. அதேபகுதியில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பேனர் ஒன்றும் கீழே சாய்ந்தது.

ஆரல்வாய்மொழி

ஆரல்வாய்மொழி, செண்பகராமன்புதூர், தோவாளை உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் பலத்த சூறைக்காற்று இரவும், பகலுமாக வீசி வருகிறது. இந்த காற்றினால் மரங்கள் முறிந்து விழுகின்றன. காற்றின் வேகம் பகலை விட இரவில் அதிகமாக உள்ளது. இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த காற்றினால் தொடர்ந்து ஆரல்வாய்மொழி பகுதியில் மின் வயர்கள் அறுந்து விழுகின்றன. இதனால் மின்தடை ஏற்படுகின்றன.

மின்தடை காரணமாக பொதுமக்கள் பெரும் அவதியடைந்துள்ளனர். ஆரல்வாய்மொழியில் இருந்து தோவாளை செல்லும் சாலையில் தேவசகாயம் மவுண்ட் செல்லும் பகுதியில் ஒரு தென்னைமரம் வேரோடு சாய்ந்து உயர் மின்அழுத்த கம்பியில் விழுந்தது, இதனால் அந்த மின்கம்பமும் சாய்ந்த நிலையில் உள்ளது. எனவே இரவு முழுவதும் அந்த பகுதியில் மின்தடை ஏற்பட்டது.

மழை அளவு

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

பேச்சிப்பாறை– 1.2, பெருஞ்சாணி– 3.4, சிற்றார் 1– 6.6, சிற்றார் 2– 5, மாம்பழத்துறையாறு– 3, பூதப்பாண்டி– 1, சுருளோடு– 3.6, கன்னிமார்– 1.5, பாலமோர்– 1.6, புத்தன் அணை– 8.6, திற்பரப்பு– 11.4 என்ற அளவில் மழை பதிவானது.

தண்ணீர் வரத்து

இந்த மழையினால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 211 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த பேச்சிப்பாறை அணைக்கு

நேற்று 338 கன அடி தண்ணீர் வந்தது. பெருஞ்சாணி அணைக்கு 384 கன அடி தண்ணீரும், சிற்றார்–1 அணைக்கு 12 கன அடி தண்ணீரும், சிற்றார்–2 அணைக்கு 19 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 3 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையில் இருந்து 784 கன அடி தண்ணீர் பாசனத்துக்காக திறந்து விடப்படுகிறது. மாம்பழத்துறையாறு அணையில் இருந்து 5 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.